**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC. 146/2018**
**Deposition of witness for prosecution –PW– 9**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சரவணன் |
| Father Name | : | திரு. சொங்கலிங்கம் |
| Village | : | அஞ்சுக்கோட்டை |
| Taluk | : | திருவாடனை |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | கிளை மேலளார் |
| Religion | : | |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 15th day of October 2024.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்பொழுது பரமக்குடி சின்னக்கடை பஜார் கிளை ஆர்டிசிசி வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.01.2015 முதல் 06.03.2017 வரை திருவாடனை கள மேலாளராக பணிபுரிந்து வந்தேன். எதிரி லிங்கப்பனும், எதிரி ராஜனும் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் செயலாளராகவும், முதுநிலை எழுத்தராகவும் பணிபுரிந்து வந்தனர். சாட்சி மனோகரன் எழுத்தராக பணிபுரிந்து வந்தார்.

எனக்கு உட்பட்ட சங்கங்களை ஆய்வு செய்வது எனது வேலையாகும். 16.09.2015 ம் தேதி நானும் சரக மேற்பார்வையாளர் செல்வமும் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தை ஆய்வு மேற்கொள்ள சென்றோம். அப்பொழுது செயலாளர் லிங்கப்பன், முதுநிலை எழுத்தர் ராஜன், எழுத்தர் மனோகரன் ஆகியோர் இருந்தனர். செயலாளரிடம் சங்க ஆவணங்களை ஆய்வுக்கு கேட்ட போது ஆய்வுக்கு ஆவணங்களை எங்களிடம் காட்டவில்லை. அங்கிருந்த ஆவணங்களில் உள்ள பதிவுகளை மட்டும் நாங்கள் குறித்துக்கொண்டு வந்தோம். அதன் அடிப்படையில் மேற்படி கடன் சங்கத்தில் ரூ.18.56 லட்சம் வரை குறைபாடு காணப்பட்டது. அந்த விபரத்தை நான் துணைப்பதிவாளர் இராமநாதபுரம் மற்றும் முதன்மை வருவாய் அலுவலர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பினேன். (**16.09.2015 தேதியிட்ட துணைப்பதிவாளர் முதன்மை வருவாய் அலுவலருக்கு எழுதிய கடிதம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அதன் அடிப்படையில்

துணைப்பதிவாளர் என்னையும் மண்டப கள மேலாளர் ராஜமுத்து, களமேலாளர் தொல்காப்பியம் ஆகியோர் கொண்ட குழுவை அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை முழுமையாக ஆய்வு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 06.11.2015ம் தேதி நாங்கள் மேற்படி சங்கத்தை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தோம். அந்த அறிக்கையில் மூன்றாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**06.11.2015 தேதியிட்ட ஆய்வறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

அந்த அறிக்கையில் மத்திய கூட்டுறவு வங்கிக்கும், அரசூர் கடன் சங்கத்தில் உள்ள ஆவணங்களுக்கும் ஒப்பீடு செய்ததில் ரூ.19 லட்சத்து 15 ஆயிரம் வரை நிதி சமமின்மை காணப்பட்டது. என்பதை அறிக்கையில் குறிப்பிட்டு துணைப்பதிவாளர் இராமநாதபுரம் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் பிரிவு 81 விசாரணை அறிக்கை மேற்கொள்ள விசாரணை அதிகாரி அருணகிரியை நியமனம் செய்து துணைப்பதிவாளர் செயல்முறை ஆணை பிறப்பித்தார். இது சம்பந்தமாக பிரிவு 81 அதிகாரி என்னை விசாரணை செய்தார். அவரிடம் இந்த வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் 21.03.2016 தேதியிட்ட வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த வாக்குமூலம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

16.09.2015 அன்று நானும், செல்வமும் மேற்பார்வைக்கு சென்றோம் என்றால் சரிதான். 2 நபர்களும் சேர்ந்து நடந்த முறைகேடு சம்பந்தமாக கூட்டு அறிக்கை தயார் செய்யவில்லை என்றால் செய்தோம். நான் அ.சா.ஆ.11 ஆவணத்தில் அறிக்கை தயாரிக்கும் போது நானும், செல்வம் என்பவரும் ஒரே நேரத்தில் அந்த ஆவணத்தில் கையெழுத்திட்டோம் என்றால் சரிதான். இரண்டு பேரும் சேர்ந்து கையெழுத்திட்ட ஆவணத்தை தான் துணைப்பதிவாளருக்கு அனுப்பினோம் என்றால் சரிதான். துணைப்பதிவாளர் அலுவலத்தில் இருந்து இந்த ஆவணம் உண்மை நகல் என்று சான்றொப்பமிட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் உண்மை நகல் என்று சான்றொப்பமிட்ட அலுவலர் யார் என்றால் அலுவலக கண்காணிப்பாளர் ஆவார். நான் கொடுத்தது அறிக்கை என்றால் சரிதான். நாங்கள் இரண்டு பேரும் கையெழுத்திட்டு தலைமை அலுவத்திற்கு ஆவணத்தை அனுப்பிய பின்பு தலைமை அலுவலத்தில் இருந்து அந்த ஆவணத்தை ஜெராக்ஸ் எடுத்து சூப்பிரண்டண்ட் அவர்களிடமிருந்து உண்மை நகல் என்று கையொப்பமிடும் பட்சத்தில் இரண்டும் ஜெராக்ஸ் அச்சாக தான் இருக்கும் என்றால் சரிதான். இரண்டு பேரும் தனித்தனியாக தான் அறிக்கை சமர்ப்பித்தோம். எனது அறிக்கையில் மைய வங்கியில் பணம் இருசால் செய்யப்படவில்லை என்றும் பல முறை சங்க செயலாளரிடம் தெரிவித்ததாகவும்

செயலாளர் பதிவேடுகளை முறையாக பேணவில்லை என்றும் சங்கத்தில் இருப்பதில்லை என்றும் பலமுறை தெரியப்படுத்தியும் செயலாளர் கேட்பதில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். நாங்கள் அந்த சங்கத்தில் முறைகேடு செய்து சம்பந்தமாக கூட்டுஅறிக்கை ஏதும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 06.11.2015 அன்று நடைபெற்ற ஆய்வின் பேரில் அந்த செயலாளர் லிங்கப்பன் என்பவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் செயலாளர் நாள்வழிப்பேரேடு, நகைக்கடன் பதிவேடு, உர இருப்பு பதிவேடு, ரசீது, வவுச்சர்ஸ் மற்றும் ரொக்க இருப்பு தொகை முழுவதும் அவர் வசமே வைத்துக்கொண்டு ஆய்வுக்கு ஒப்படைக்க மறுக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளோம். அதனால் சங்கத்தை ஆய்வு செய்ய இயலவில்லை என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தின் ஆவணங்களை செயலாளர் ஒப்படைக்காமல் மறுத்த நிலையில் விஏஓ முன்னிலையிலும் தலைவர், செயலாளர் முன்னிலையிலும் மேற்படி நகை பாதுகாப்பு பெட்டகத்தின் சாவியை மத்திய கூட்டுறவு வங்கியில் பெற்று நகைகளை பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த அறிக்கையில் ரூ.19,15,000 நிதி சமமின்மை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நிதி சமமின்மை நான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விசயங்கள் எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஆய்வுக்கு தலைமை வகித்தவர் தொல்காப்பியம் சார்பதிவாளர் ஆவார். நான் சொல்வது போல் ஆய்வறிக்கை நடைபெறவில்லை என்றும், அப்படி ஆய்வு செய்திருந்தால் Inspection Note ல் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC. 146/2018**
**Deposition of witness for prosecution –PW– 8**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வம் |
| Father Name | : | திரு. கருப்பையா |
| Village | : | கூத்தன்வயல் |
| Taluk | : | திருவாடனை |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | செயலாளர் |
| Religion | : | |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 15th day of October 2024.

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது திருத்தேர்வலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 15.05.2015ம் தேதி திருவாடனை சரக மேற்பார்வையாளராக பணியில் இருந்த போது எதிரி லிங்கப்பன், எதிரி ராஜன் ஆகியோர் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் செயலாளர் மற்றும் முதுநிலை எழுத்தராக பணிபுரிந்து வந்தனர். என்னுடைய வேலையானது எனக்கு உட்பட்ட சங்கங்களின் நகைக்கடன் இருப்பு, பொதுப்பேரேடு, நாள்வழிப்பேரேடு, உரம் இருப்பு பேரேடு, ரேசன் கடையில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் ஆய்வு செய்வது ஆகும்.

16.09.2015ம் தேதி நானும், கள மேலாளர் சரவணனும் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தை ஆய்வு செய்ய சென்றோம். செயலாளர் லிங்கப்பன், முதுநிலை எழுத்தர் ராஜன், எழுத்தர் மனோகரன் ஆகியோர் சங்கத்தில் இருந்தனர். ஆய்வு மேற்கொள்ள செயலாளரிடம் ஆவணங்களை கேட்ட போது நாள் வழிப்பேரேடை அன்று வரை எழுதவில்லை என்பதால்

எங்களிடம் காண்பிக்க மறுத்துவிட்டார். அதனால் சங்கத்தில் இருப்பு குறைவு பார்க்க முடியவில்லை. ஆனால் கடன் பேரேடுகளை பார்வையிட்ட போது மத்திய வங்கி ஆவணங்களுக்கும் ரூ.18.56 லட்சம் வரை வித்தியாசம் காணப்பட்டது. இந்த விபரத்தை நான் ஆர்டிசிசி வங்கி கிளை திருவாடனையில் கடிதம் கொடுத்து 13 pt அரசூர் தொடக்க வேளாண்மை வரவு செலவுகளை நிறுத்தி வைக்க சொன்னேன். கள மேலாளிரிடம் இந்த அரசூர் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் தவறு நடக்க வாய்ப்பிருக்கிறது என சொன்னேன். கள மேலாளர் இது குறித்து முதன்மை வருவாய் அலுவலருக்கு கடிதம் எழுதினார். (**16.09.2015 தேதியிட்ட கடிதம் உண்மை நகல் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அதன்பிறகு கள அலுவலர் கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் ஒரு குழு போட்டு மேற்படி சங்கத்தை ஆய்வு செய்தனர். மேற்படி சங்கத்தில் பிரிவு 81 விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு என்னை விசாரணை அதிகாரி விசாரித்தார். (**என்னிடம் காட்டப்படும் 16.03.2016 தேதியிட்ட வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.)** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.சா.ஆ.9 சான்றாவணம் ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். அதில் Attested போடப்பட்டுள்ளது. சரக மேற்பாற்வையாளர் என்ற பதவியானது 18 சங்கங்களை சுழற்சி முறையில் மேற்பார்வை செய்வது தான் என்பதாகும். நான் ஒவ்வொரு சங்கத்திலும் சென்று ஆய்வு செய்யும் போது அந்த சங்கத்தில் பராமரிக்கப்படும் Inspection note ல் கையெழுத்திட வேண்டும் என்றால் சரிதான். 16.09.2015 அன்று சங்கத்திற்கு ஆய்வுக்கு சென்று ஆய்வு செய்யும் போது பொதுப்பேரேடு, நாள்வழிப்பேரேடு, உரம் இருப்பு பேரேடு, நகைக்கடன் இருப்பு ஆகிய ஆவணங்களை எனது ஆய்வுக்கு தரவில்லை. அந்த ஆவணங்கள் அனைத்தும் செயலாளர் வசம் இருந்தது என்றால் சரிதான். அந்த ஆவணங்களை என்னிடம் செயலாளர் என்னிடம் தர மறுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை முழுமையாக பார்வையிடாமல் என்னால் முழுமையான அறிக்கை கொடுக்க முடியாது என்றால் சரிதான். நான் வழங்கிய அ.சா.ஆ.9 ஆவணத்தில் தொகை 18.56 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது 18.56 லட்சமா அல்லது 18,056 என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.9 ஆவணத்தில் எதிரியிடமோ, சங்கத்தில் பணிபுரிந்த நபர்களிடமோ எந்த கையெழுத்தும் வாங்கப்படவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட 18.56 என்பது எந்த ஆவணத்தை பார்வையிட்டு என்னால் தயாரிக்கப்பட்டது என்பது குறித்து அ.சா.ஆ.9 குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கடல் பணம் வசூல் செய்யும் கடமை யாரை சார்ந்தது என்றால் செயலாளரைச் சார்ந்தது. நான் எந்த வித ஆய்வுக்கு செல்லவில்லை என்றாலும், பின்னிட்டு இந்த ஆவணம் என்னால் தயாரித்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணம் நகல் ஆவணம் என்பதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC. 146/2018**
**Deposition of witness for prosecution –PW– 7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மனோகரன் |
| Father Name | : | திரு. குருசிங்கம் |
| Village | : | அரசூர் |
| Taluk | : | திருவாடனை |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | செயலாளர் (ஓய்வு) |
| Religion | : | |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 15th day of October 2024.

**முதல் விசாரணை:**

நான் அஞ்சுக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் செயலாளராக பணிபுரிந்து 29.02.2024ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது அரசூரில் குடியிருந்து வருகிறேன். 02.07.2011 முதல் எழுத்தராக பணிபுரிந்து 2021 வரை பணிபுரிந்து வந்தேன். அப்பொழுது கடமைகளுடன் பொறுப்புகளும் நிர்ணம் செய்யப்பட்டது. தீர்மான புத்தம் பக்கம் 119 மற்றும் 120ல் உள்ள என்னுடைய பெயருக்கு உரிய கடமைகளும், பொறுப்புகளும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி லிங்கப்பன் செயலாளராகவும், ராஜன் முதுநிலை எழுத்தராகவும் அரசூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கியில் பணிபுரிந்தனர்.

எனக்கு பதிவேடுகளை பராமரித்தல், வங்கியில் பணம் செலுத்துதல், ரேசன் கடைகளுக்கான சிட்டா ரசீதுகளை பராமரித்தல் எனது வேலையாகும். எதிரிகள் லிங்கப்பன் மற்றும் ராஜன் ஆகியோருக்கு கூட்டு கணக்கு பராமரித்து வந்தனர். செயலாளர், முதுநிலை எழுத்தர் ஆகியோருக்கு நாள்வழிப் பேரேடு, சிட்டா, ரசீது கோருதல், வங்கியில் பணம் செலுத்துதல் மேலும் வங்கியின் அனைத்து அரசு அலுவல்களை செய்வது அவர்களது கடமையாகும். நான் தலைவர் மற்றும் செயலாளர் சொல்லும் வேலைகளை செய்வேன்.

16.09.2015ல் கள அலுவலர் சரவணன் மேற்பார்வையாளர் செல்வம் ஆகியோர் எங்களது அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு

வந்தார்கள். அப்போது வங்கி செயலாளர் லிங்கப்பன், முதுநிலை எழுத்தர் ராஜன் ஆகியோர் இருந்தார்கள். அவர்களிடம் கணக்கு வழக்கு பார்க்க வேண்டும் எனவே நாள்வழிப்பேரேடு, பொதுப்பேரேடு, சிட்டா ஆகியவைகளை பார்வையிட வேண்டும் என கேட்டார்கள். அதற்கு செயலாளரும், முதுநிலை எழுத்தரும் கணக்கு முடிக்காமல் இருக்கிறது முடித்து தருகிறோம் என்று சொன்னார்கள். அதனால் கள அலுவலரும், மேற்பார்வையாளரும் ஒப்பிட்டு கணக்குளை மைய வங்கி கணக்குடன் பார்க்க முடியவில்லை.

அதன்பிறகு தலைவர் அலுவலகத்திற்கு வந்து செயலாளரிடம் கணக்கு வழக்குகளை கேட்டார். செயலாளர் கணக்கு கொடுக்காமல் மறுத்ததால் 15.10.2015 ல் செயலாளர் லிங்கப்பனை தலைவர் தற்காலிக பணிநீக்கம் செய்தார். அதன்பிறகு லிங்கப்பன் வங்கிக்கு வரவில்லை. தலைவர் உடனே துணைப்பதிவாளர் இராமநாதபுரம் அவர்களுக்கு கடிதம் எழுதினார். அதன் அடிப்படையில் துணைப்பதிவாளர் கள அலுவலர் திருவாடனை மண்டபம் களஅலுவலர் இராஜமூர்த்தி, கள அலுவலர் சரவணன் ஆகிய மூவரும் குழு அமைத்து ஆய்வுக்கு உத்தரவிட்டார்.

சங்கத்தில் உள்ள உர கிட்டங்கியை செயலாளர் பூட்டிவிட்டு சென்றதால் விவசாயிகளுக்கு உரம் வழங்க முடியவில்லை. விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டதால் ஆட்சியர் காவல்துறையினர், கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் எங்களது கடன் சங்கத்தின் உர கிட்டங்கியை உடைத்து திறப்பதற்கு உத்தரவிட்டார். திறந்து பார்த்த போது ரூ.3,08,365 அளவுக்கு இருப்பு குறைவு காணப்பட்டது. 09.11.2015 ல் என்னிடம் ரூ.12,38,260 அளவிலான 1650 மூடை உரங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நாள் முதல் நான் பேரேடுகளை பராமரித்து வந்தேன். அதன்பிறகு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் பிரிவு 81 ன் படியான ஆய்வுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பிரிவு 81 ஆன விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படும் 31.03.2016 தேதியிட்ட வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த வாக்குமூலம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

செயலாளர் லிங்கப்பனும், முதுநிலை எழுத்தர் ராஜனும் கூட்டாக சேர்ந்து ரொக்க பணம் ரூ.4,72,365 ம் காசோலை மூலம் ரூ.6,00,000 உரம் ரூ.3,08,000 ஆக மொத்தம் 13,80,310 அளவுக்கு கையாடல் செய்ததது தெரியவந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பணிபுரிந்த அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் பணப் பொறுப்பு முழுவதும் செயலாளரையே சாரும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி முதுநிலை எழுத்தர் என்றால் சரிதான். அவருக்கென்று கடமையும் பொறுப்பும்

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவருக்கென்று பணப்பொறுப்புகள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ரொக்கப்பணம் ரூ.472365-யை செயலாளர் லிங்கப்பன் கணக்கில் வரவு வைக்காமல் 15.10.2015 அன்று தலைவர் வசம் ஒப்படைக்காமல் சென்றுவிட்டதால் அவர் தற்காலிக பணிஇடை நீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். 15.10.2015 தலைவர் செயலாளர் லிங்கப்பனை குற்றச்சாட்டு சம்பந்தமாக பணிஇடைநீக்கம் செய்யும் போது எதிரி அந்த சொசைட்டியில் தான் பணிபுரிந்தார் என்றால் சரிதான். அப்போது எதிரியின் மீது எத்தகைய குற்றச்சாட்டும் இல்லை என்றால் சரிதான். செயலாளர் லிங்கப்பன் கணக்குவழக்குகளை சரியாக பராமரிக்காததலும், ரொக்க கை இருப்பை சரியாக பராமரிக்காததாலும் உர இருப்பை கையாடல் செய்ததாலும் அவரை தலைவர் பணிஇடை நீக்கம் செய்துவிட்டு, என்னை உர விற்பனை சம்பந்தமான பணிகளை செய்யும்படி தலைவர் உத்தரவிட்டார் என்றால் சரிதான். உர கை இருப்பு சம்பந்தமாக விஏஓ தலைமையில் சொசைட்டியில் ஆய்வு செய்து கணக்கு சரிபார்க்கப்பட்டது என்றால் சரிதான். உர கணக்குகளை ஒப்படைக்காததால் நடவடிக்கைக்கு பயந்து செயலாளர் லிங்கப்பன் உர கிடங்கை மூடிவிட்டு தலைமறைவாகிவிட்டார் என்றால் சரிதான். எதிரி ராஜன் மூலம் செயலாளர் லிங்கப்பன் தலைமையிட வங்கியில் இருந்து காசோலை மூலம் ரூ.6,00,000 பெற்று மேற்படி தொகையை கையாடல் சம்பந்தமாக எந்த விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சாட்சி சரவணன் மற்றும் செல்வம் ஆகியோர்கள் எங்களது கிளைக்கு வந்து 16.09.2015 அன்று கணக்கு வழக்குகள் பார்த்தது சம்பந்தமாக நான் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் சோதனைக்கு வந்தது சம்பந்தமாக ஆவணங்கள் எதையும் பார்வையிட்டது சம்பந்தமாகவும் ஏதும் ஆவணம் தயாரித்தது சம்பந்தமாகவும் எனக்கு எந்த விசயமும் தெரியாது என்றால் சரிதான். எங்கள் வங்கியில் உள்ள நாள்வழிப்பேரேடு, பொதுப்பேரேடு, சிட்டா ஆகியவற்றை செயலாளர் தான் பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். கடந்த 09.03.2017 அன்று துணைப்பதிவாளர் பாலகிருஷ்ணன் அவர்கள் கீழ் நடைபெற்ற 87 பிரிவின் கீழான தண்டத்தீர்வை ஆணையில் எங்கள் சொசைட்டியில் நிதி இழப்பு ஏற்பட்ட தொகையான ரூபாய் 13,80,730-ல் நிதி இழப்பிற்கு செயலாளர் லிங்கப்பனால் ரூ.6,00,000 போக மீதி 7,80,730 க்கு செயலாளர் லிங்கப்பனை பொறுப்பாவர் என்றும், எதிரி ராஜன் என்பவர் மீதான தண்டவழக்கு கைவிடப்பட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் எந்த விசயமும் தெரியாத நிலையில் அரசுத்தரப்பில் சாட்சியாக சேர்க்கப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.